ஸ்ரீ: Regd No. M 4456

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி

ஸம்ரக்ஷிணீ

ஸம்புடம் 6] [ஸஞ் 10--11



ஸுபானு

1943

ஐப்பசி
கார்த்திகை

அக்டோபர்
நவம்பர்

வருஷச் [மாதப் பத்திரிகை.] சந்தா 2-0-0

ஸம்பாதகர்—பரவஸ்து. ஸ்ரீநிவாஸாசாரியர்

S. No. .... *சந்தா ரூ* ....

Sri.

போஷகர் வருஷ சந்தா ரூ. 5-0-0

ஹிதைஷி சந்தாதாரர் ரூ. 50-0-0

SRI SAMRAKSHINI CFFICE, THILLAISTANAM. B. O. (VIA)TIRUVADI

விஷய அட்டவணை.

1.	இதரபாரதந்திரியம்.	379—382
2.	ஸ்ரீதயாதேவி.	383—386
3.	முகுந்தமாலை.	387—390
4.	யதுநாதன் (முன்தொடர்ச்சி.)	391—394
5.	ஸ்ரீதேசிகஸம்ப்ரதாயம்.	395—396
6.	திருப்புட்குழி ஸ்வாமியின்...மஹோத்ஸவம்	397—398
7.	ஸ்ரீ யாதவாப்யுதயம்	271—278
8.	திருமஞ்சனம். (வடுவூர்)	ராப்பர் 3-வதுபக்கம்.
9.	திருப்பதியில் ஸ்ரீதேசிகனுத்ஸவம்	,, 4-வதுபக்கம்.

எச்சரிக்கை.

ஸ்ரீ ஸம்ரக்ஷிணீ சந்தா பாக்கிதாரர்களுக்கு விநயத்துடன் செய்யும் விஞ்ஞாபனம். நம் ஸம்ரக்ஷிணிக்கு அடுத்தமாதத்தோடு 6வது வயது பூர்த்தி அடைகின்றது இதுவரை சந்தா பாக்கி அனுப்பாதவர்கள் வரும் கார்த்திகைமீ 30உ (15—12—43) தேதிக்குள் சந்தா பாக்கிகளை ஸம்ரக்ஷிணீ ஆபீஸ் சேரும்படி செய்ய வேணும். இக்கடிதம் விலை க்கடுமையில் சிலர் சென்ற வருஷங்களின் சந்தா பாக்கிகளையும் பலர் நாளதுவரை பாக்கியையும் அனுப்பாமலிருந்தால் உங்களையே மூலதனமாக நம்பியிருக்கும் ஸம்ரக்ஷிணீ எப்படி நடைபெறும். மேல் குறித்த தேதிக்குள் சந்தா பாக்கி அனுப்பாதவர்களுக்கு மார்கழிமீ (டிஸம்பர்) ஸஞ்சிகை வி. பி. யில். அனுப்பப்படும். இதை மதிப்புக் குறைவாக சிலர் நினைப்பது தவறாகும். பலர் வி. பி. யில். அனுப்பும்படி நியமிக்கிறார்கள். உதாரணமாக ஒருவர் கடிதம் கீழே காட்டப்படுகிறது. பாக்கி அனுப்புவதற்கு சக்தியோ, இஷ்டமோ இல்லாதவர்கள் மேலே குறிப்பிட்டதேதிக்குள் முன் அறிவித்தால் வி. பி. அனுப்புவதை நிறுத்திக்கொள்ளுகிறோம். வி. பி. யை. திருப்புவதில் ஸம்ரக்ஷிணிபாக்கியை இழப்பதுமின்றி வி. பி. செலவின் ச்ரமத்திற்கும் ஆளாகிறது (M. O. கூப்பன்) சந்தாதுகை அனுப்ப மறந்து போய்விட்டேன். தயவு செய்து இனிமேல் வி. பி. அனுப்பினால் தவறாமல் சந்தாதுகை வந்துசேரும். N. நரஸிம்மன் என்ற ஸ்ரீமான் N. நரஸிம்மய்யங்கார் B. A. B. L வக்கீல். ஹைதராபாத் (டெக்கான்.) 6-9-43ல், 1942, 1943, வருஷங்களுக்கு ரூ 10. அனுப்பியிருக்கிறார்.(ப. ஸ்ரீ

ஸ்ரீ:

"ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ"

(ஓர் மாதப் பத்திரிகை.)

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் நிகிலவ்யவஹாரக்ருத் ।
ஸ்வதந்த்ரம் ஸர்வதந்த்ரேஷு வேதாந்ததேஶிகாஹ்வயம் மஹ: ॥

ஸம்புடம்.	ஸுபாநு	ஸஞ்சிகை
6	ஐப்பசி—கார்த்திகை.	10—11

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ।

இதர பாரதந்திரியம்.

ஸம்ரக்ஷிணி ஆவணி ஸஞ்சிகையில் குறிப்பிட்ட விரூப பாரதந்திரியமென்பதுதான் இதர பாரதந்திரியமெனப் படும். இதரர் என்றால் பகவான், பாகவதர்களின்றி மற்றவராகிறார். அவர்கள் "கொண்ட பெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரு" மாவர். இவர்களுக்குட்பட்டிருப்பதை "கண்டதோடுபட்டதல்லால் காதல்மற்றுயாதுமில்லை" யென்று தடுத்து "எண்டிசையும் கீழும் மேலும் முற்றவுமுண்டபிரான் தொண்டரோமாயுய்யலல்லாலில்லை கண்டீர் சரணே" என்று பகவத் பாரதந்திரியத்தை விதிக்கிறார் நம்மாழ்வார். நம் மங்கைமன்னனும் "பிறர்க்கே உழைத்தேழையானேன்" என்கிறார். இங்கேழையாவது கைமாவுக்கருள் செய்த கண்ணனுக்குக் களிப்பூட்டும் கைங்கர்யம் ஒன்றுமின்றியிருப்பது. நம் தேசிகனும்

𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍍𑌸𑌾𑌵𑌸𑌜𑍍𑌜𑍈𑌃 𑌸𑍍𑌵𑌕𑍃𑌤𑌕𑌰𑍍𑌮𑍋𑌦𑌿𑌤𑌤𑍁𑌚𑍍𑌛𑍈𑌃
𑌸𑍁𑌤𑌦𑍁𑌹𑌿𑌤𑍃𑌸𑌹𑍋𑌦𑌰𑌾𑌨𑍁𑌚𑌰𑌬𑌨𑍍𑌧𑍁𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌿𑌭𑌿𑌃 ।
𑌧𑌨𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿𑌭𑌿𑌰𑌪𑌿 [illegible]
[illegible] ॥

ப்ரபோ ! உன்னை அனுபவிக்க ஆசைப்பட்டவர் தாங்கள் செய்த கர்மத்தினுல் கிடைத்த மிக்கச்சிறிய ஸுகத்திற்காக வந்த பெண்டுகள், பிள்ளைகள், உடன் பிறந்தவர், உடன் வருபவர், பந்துக்கள், ஸம்பந்திகள், பொருள் முதலியவைகளால் தரிக்கமாட்டார். ஏனெனில் இவைகள் பின்பு பல ப்ரபல பயங்களைக்கொடுப்பவை'' என்றருளிச் செய்தார். ஆனலும்

𑌵𑍃𑌦𑍍𑌧𑍌 𑌚 𑌮𑌾𑌤𑌾 𑌪𑌿𑌤𑌰𑍌 𑌸𑌾𑌧𑍍𑌵𑍀 𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌸𑍁𑌤𑌶𑍍𑌶𑌿𑌶𑍁𑌃 ।
𑌅𑌪𑍍𑌯𑌕𑌾𑌰𑍍𑌯𑌶𑌤𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌭𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌮𑌨𑍁𑌰𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ॥

வயதுசென்ற தாய் தந்தைகள், மனத்திற்கிசைந்த மனைவி, இளம்பிள்ளைகள், இவர்களைப் பல தவறுகள் செய்தும், பரிபாலிக்கவேணுமென்று மனு சொன்னர் என்றிருப்பதால் இவர்களை எப்படி உபேக்ஷிக்கலாமெனில் பகவத் பாகவதர்களுக்குப்போலவே தாய் தந்தைகளுக்கும் தன்னுலியன்றவரைப்பணிசெய்வதோடு அவர்களிட்ட வழக்காயிருக்கவேணுமென மறைகள் முறையிடுகின்றன. நான்கு புருஷார்த்தங்களுக்கும் ஸாதனமான விச்சரீரத்தை நமக்குக்கொடுத்து படாதன பட்டு வளர்த்து இங்குய்யச்செய்தவர்களன்றோ இவர்கள். மனைவியும் மனையில்வரும் மஹநீயர்களை மகிழ்ந்து உபசரிப்பதற்கும் மற்றுமுள்ள தர்மங்களுக்கும் உதவிசெய்பவளாகையாலும் எங்கோ பிறந்த இவளைக் கைபிடித்துத் தன்னில்லத்தில் உழைத்து வருவதற்கு அழைத்துவந்தவனுகையால் ஆதரிக்கவேண்டுவதூ அவச்யமாகும். இவளிடம் பெற்ற

ஏஷ்டவ்யா பஹவ: புத்ரா யத்யேகோ(அ)பி கயாம் வ்ரஜேத்
பல பிள்ளைகள் வேண்டும், ஒருவனாவது கயை செல்வான் என்றும்

ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா: ।
வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ நஸ்ஸந்தாரயிஷ்யதி ॥

(நம் குலத்தில் பிறந்தவன் பகவத்ஸம்பந்தத்தால் நம்மைக் கரையேற்றுவானென்று பித்ருக்கள்தோள் தட்டுகிறார்கள். பாட்டன்மார்கள் நர்த்தனம் செய்கிறார்கள்) என்று சொல்லுகிறபடி பெருமைபெற்ற மக்களையும் பேணுவது கடமையே. இவர்களை இரக்ஷிப்பதற்குரிய காரியங்களைச்செய்யும்போது இவர்களுக்கு இவன் சேஷன் (பெருமைப்படுத்துகிறவன்) ஆனாலும் இவர்களால் யாகத்தில் யஜமானன்போலே பெருமையடைந்து சேஷியாகிறான். ஆயினும் இவர்களிட்டவழக்காய்த்தானிருந்து இவர்களுக்கு அடிமைசெய்வது ஸ்வயம் புருஷார்த்தமென நினைத்து காலம் முழுவதும் கடத்துவது'யத்ர பார்யாகிரோவேதா:' (மனைவியின் மொழிகள் மறைகள்) ளென்றபடி கலியின்காரியமாகும். மஹாவைராக்யமுள்ள மஹநீயர்கள் மாதா பிதாக்கள் மனைவி மக்களையும் விட்டு மனுவின் வார்த்தையையும், மதியாமல் மகிழ்ந்து துறவறம்பூண்டு துயராறுகிறார்கள் ''ஸ்வக்ருதகர்ம நிர்வர்த்திதை:' என்று ஸ்ரீதேசிகன் கூறியபடி செயற்கை உறவினராகிய இவர்களிடம பாரதந்திரியமும் இதர பாரதந்திரியமெனறே திருவுள்ளம் போலும். இவர்களை பரிப்பதற்கு அனுமதித்த அகார்யங்களும் ஆபத்தர்மங்களாகச் சொல்லப்பட்ட ''மத்யமம க்ருஷிவாணிஜ்யம்' பயிரிடுவது வியாபாரம் செய்வது முதலிய மத்யம விருத்திகளாகும். ஆகையாலன்றோ நம் பெரியோர்கள் கிராமங்களில் க்ருஷியை ஜீவனமாக வைத்துக்கொண்டு வர்ணாசிரம தர்மங்களையும் காப்பாற்றி வந்தார்கள். இப்போதோ ஏழைகள், தனிகர்கள் என்ற பிரிவின்றி எவரும் ''கோச்சரேத் யாவநீம்

பாஷாம்" ம்லேச்சர் பாஷையை உச்சரிக்கலாகாதென்ற விலக்கை விலக்கி, பிறந்த மக்கள் அனைவரும் பிறர் பாஷைக்கே யிட்டுப் பிறந்தவர்களென்று பள்ளிக்கூட்டம் நிறைந்த பள்ளிக்கூடங்களுக்கனுப்பி பொருட்படுத்தாது பொருள்களை வாரியிரைத்து பரீக்ஷைகளில் தேறி பதவிகளைப் பெறுவதெனும் பெயரால் பிறரிடம் பாரதந்திரியம் பெறச்செய்து பொருளீட்டுவது பொறுத்தமாகுமா? ஏழைகளுக்கு இது ஆபத்தர்மமானாலும் தனிகர்களுக்கு இது தர்மமாகுமா? இப்பாரதந்திரியம் நரகமென்றன்றோ நம் ஆசார்ய ஸார்வபௌமன் பெரிய ரஹஸ்யத்தின் இறுதியில் 'நியமுகியெதாவா ஈதஂதூஸிரயா நீதாஷவஂ வாஸராஃ' பிறர்க்கடிமையெனும் பெருநரகின்றி நலமுடன் நாட்கள் நடந்தன" வென்று மகிழ்கிறார். உஞ்சவிருத்திசெய்த இவ்வுத்தமனுக்கு, உலகுக்குழைத்த ஓர் உதாரனுக்கு வறுமையினால் வருந்தும் நமக்கு வழிகாட்டி வழங்கிய வள்ளலுக்குத் தானே வைஷ்ணவ உலகமனைத்தும் வழிபடுகின்றது.

ந ஹி கல்யாணக்ருத்கஶ்சித் துர்கதிஂ தாத கச்சதி ॥

அப்பா நல்லது செய்பவன் எவனும் நலிவை நண்ணமாட்டானென்று நங்கண்ணன் நன்மொழியை நாம் அனைவரும் நன்குக்கடைப்பிடித்து நடக்கும்படி நல்கவேண்டுமென நம் தேசிக ஸார்வபௌமனையே வேண்டுகிறோம். (ஸம்பாதகர்)

நம் ஸம்ரக்ஷிணியை ஸம்ரக்ஷிக்க ஜீவித சந்தாதாரர் ஸ்தானத்தை அங்கீகரித்துள்ளவர்கள்.

1. ஸ்ரீமான் கும்பகோணம் ஸ்ரீநிவாஸய்யங்கார் பர்மாஷெல் ஏஜண்டு எக்ஸ்டங்ஷன்.

ஸ்ரீமான் ஷி T. S. ராஜகோபாலய்யங்கார் வாஸனுத்ரவ்யசாலை

3. ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் (சர்மா) திருமலைதாதாசாரியர்

4. சென்னை புரசபாக்கம் ஸ்ரீமான் டி, ராமஸ்வாமி ஐயங்கார் வக்கீல் இவர் 'ஸம்ரக்ஷிணிக்கு ஸமயமறிந்து பொருளுதவிசெய்பவர்.

5. தில்லஸ்தானம் ஸ்ரீமான் S. சேஷாத்ரி அய்யங்கார் தம் உள்ளம்போல் பெரிய பீரோவை ஸம்ரக்ஷிணீ ஆபீஸிற்கு அளித்தவர்.

ஸம்பாதகர்

ஸ்ரீ தயா தேவி.

(சிருங்கட்டூர் S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி)

இடம் - திருமலை. காலம் - இரவு மணி 9. மழைகாலம் மனதைக்கவரும் குளிர்ந்த தென்றல். வானத்தில் எங்கு பார்த்தாலும் நீர்கொண்ட கருத்த மேகங்கள். ஒருபுறம் கண்ணைப்பறிக்கும் மின்னல். மற்றொருபுறம் காதைத்துளைக்கும் இடிமுழக்கம். நீர்வீழ்ச்சியினால் உண்டாகும் மதியை மயக்கும் சல சல சப்தம், ஆனந்தத்தையூட்டும் மயில்களின் அற்புத நடனம். நம்மை பரவசமடையச்செய்யும் பரவைகளின் கூக்குரல். மூக்கைத்துளைக்கும் நறுமணம். ஸகிக்கவொண்ணாத குளிர். இது ஒருபுறம் இருக்க மற்றொருபுறம் சுமார் ஒருமைல் தூரம். சந்திரசூரியர்கள் ஏககாலத்தில் பிரகாசித்தாற்போல பற்பல தீப பிரகாசங்கள் கண்களைப்பறித்தன. ஆகாசத்தை அளாவிநிற்கும் கோபுரமும், பிராகாரங்களும் பார்ப்பவர்களை பிரமிக்கச்செய்தன. இரத்தினங்கள் இழைத்தாற்போல் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்ற கோவிலின் முன் மண்டபத்தின் தோற்றம் பார்ப்போர்களை ஆனந்தக்கடலில் மூழ்கச்செய்தது, அங்கிருந்த மின்சார விளக்குகள் அமைக்கப்பெற்ற சக்கரத்தின் சுழலானது ஸம்ஸாரத்தின் நிலையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்த்தியது. இதற்கு மேல்புறத்தில் தசாவதாரச்சித்திரங்கள் வரிசையாக பொருத்தியிருப்பது அவ்வப்போது லோகஸம்ரக்ஷணார்த்தம் பல அவதாரங்கள் எடுக்கும் ஆதிமூர்த்தியின் இருப்பிடமாகிய ஸ்ரீவைகுந்தம் இதுதான் என்பதை அனைவருக்கும் எடுத்து உரைப்பதுபோல் இருந்தது. சற்று பின்புறத்தில் முதலையால் கௌவப்பட்டு 'ஆதிமூலமே' என்று கதறி அழும் கஜேந்திராழ்வானை காக்க சங்குசக்ரமேந்தி விரைந்தோடிவந்த பகவானின் அற்புதச்சித்திரக்காட்சி. பெருந்தவத்தில் ஈடுபட்டு வந்த துருவனுக்கு ஸேவை ஸாதித்தருளின ஆனந்தக்காட்சி.

இவ்வபூர்வத்தோற்றத்தைக்கண்டு திகைத்து நின்றபோது சலசல சப்தம் காதில் விழுந்தது. சற்றென்று திரும்பிப்பார்த்தேன். கண்ணுக்கெட்டியவரையில் ஒரே ஜனத்திரளின் கோலாஹலம். கோவிந்தா! கோவிந்தா என்று எழும்பும் தீனக்குரல்கள், என்னப்பனே! ஸ்ரீநிவாஸா! தயா

நிதே! உன் திருவடியைச்சேரும் பாக்யம் எப்போது வருமோ? பரமபுருஷா! தீனதயாளோ! எனக்கு வேண்டிய ஐச்வரியம் தந்தருளவேண்டும். பக்தவத்ஸலா எல்லோருக்கும் நீ கல்பக விருக்ஷம்போல் அவரவர்களுடைய அபீஷ்டங்களை நிறைவேற்றிவைக்கும் கருணாநிதியல்லவோ. நான் புத்திரனில்லாமல் தவிப்பது உமக்குத் தெரியவில்லையா. வெங்கடாசலபதியே! உன்னையே அடைக்கலம் புகுந்தேன். எனக்கு வேண்டிய வித்தைகளைத் தந்தருளவேண்டும் என்ற பல கூக்குரல்கள் கிளம்பின. நித்யஸூரிகள்போன்ற பாகவத ச்ரேஷ்டர்கள் தயாசதகம் அச்சுத சதகம் முதலிய ஸ்தோத்திரங்களை அநுஸந்திக்கும் காட்சி மிக அற்புதமாய் இருந்தது. நான்கு திக்குகளையும் திரும்பிப்பார்த்துவிட்டு வானத்தில் கண்களைச் செலுத்தினேன். வாயுமண்டலபர்யந்தம் ஒரே தீபப்ரகாசம். என் மனது சற்று திடுக்கிட்டது. அச்சம்பவங்கள் எல்லாவற்றையும் கண்டவுடன் நான் எங்கு இருக்கிறேன். என்ன செய்கிறேன். எதற்காக இங்கு வந்தேன். என்ற ஸந்தேஹங்கள் பல உண்டாயின. திக்பிரமம் பிடித்தாற்போல் சற்றுநேரம் நின்றவிடத்தைவிட்டு அசையாமல் அப்படியே இருந்தேன் எங்குபார்த்தாலும் ஒரே தீபப்ரகாசமாய் இருப்பதால் இது ஒரு ஜோதிர்லோகமாய் இருக்கலாமென்று மாத்திரம் ஓர் எண்ணம் உதித்தது. இப்படி ஐந்துநிமிடங்கள் கழிந்தன. திடீரென்று என்னையுமறியாமல் ஆனந்தக்கண்ணீர் கீழே விழுந்தது. உடம்பெல்லாம் அளவில்லா மயிர்க்கூச்சல். என்னையுமறியாது ஓர் ஆனந்தம் என் மனதை நிரப்பியது. சற்று அசைந்தேன். ஆ! என்ன ஆச்சர்யம் என்னவென்று உரைப்பேன். என்ன பளபளப்பு. மனதை மயக்கும் ஓர் மன்மதாகாரமான உருவம் என்கண்முன் தோன்றிற்று. உற்றுப்பார்த்தேன். அவ்வுருவத்தின் ஜோதிதான் என்ன! பூர்ணசந்திரனை ஒத்த திருமுக மண்டலம். கருத்தவிழிகள், தாமரைபோன்ற நயனங்கள். நீண்டு வளைந்த புருவங்கள். சிவந்த உதடுகள். அதில் ஓர் புன்சிரிப்பு. சங்குபோல் நீண்ட கழுத்து. விசாலமான திரு மார்பு. அதில் கௌஸ்துபமணி தவழ்ந்து தொங்குகின்றது ஒருபுறம் பெரிய பிராட்டியார், மற்றொருபுறம் தயாதேவி. ஒரு கரத்தில் சங்கம், மற்றொரு கரத்தில் சக்கரம். செந்தாமரைபோன்ற சிவந்த திருவடிகள். வலது புறத்தில் ஸ்ரீதேவி. இடதுபுறத்தில் பூதேவி, இப்படி

உல்லாஸமாக ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் பரம புருஷனைக் கண்ணாரக்கண்டேன். அச்சமயம் இருந்த என் நிலைமையை என்னால் கூறமுடியாது

'फलवितरणदक्षं पक्षपातानभिज्ञं
अनुभवितुमघौघं नालमागामिकालः ।'

என்ற சில ச்லோகங்கள் மாத்திரம் என் வாயிலிருந்து வெளிக்கிளம்பின. முதலில் நான் செய்த பாபங்களை நினைத்து மிகவும் வருந்தினேன். அடுத்த க்ஷணமே லோகமாதாவான தயாதேவியைக்கண்டு சற்று ஆறுதல் அடைந்தேன்: இது தான் ஸ்ரீவைகுந்தம் என்பதிலும் இங்கு வீற்றிருக்கும் ஸ்ரீநிவாஸனே பரமபதநாதன் என்பதிலும் கிஞ்சித்தேனும் ஐயமுண்டோ!

ஹா! பரமபுருஷா! ஆபத்பாந்தவா! அடுத்தவரைக் காக்கும் ஆராவமுதமே! என் ஹ்ருதயகமலத்தில் வஸிக்கும் உன்னை மறந்தேன். உன் ஆஞ்ஞைகளான சாஸ்திரங்களை மீறினேன். உன்னைக்கண்டு களிக்க நீ எனக்கு அளித்த கண்களை வேறு விஷயங்களில் செலுத்தினேன். உன்னைப்புகழ்ந்து பாட நீ எனக்கு அளித்த வாயினால் பெரியோர்களை நிந்தித்தேன். உனது கல்யாண குணங்களைக்கேட்டு ஆனந்திக்க நீ எனக்கு அளித்த செவிகளை வேறு விதத்தில் உபயோகித்தேன். பூர்வபுண்ய வசத்தால் மேன்மையுள்ள மானிட தேகத்தை நீ எனக்கு அளித்தாய். உன்னைத் தொழாத என் ஜன்மம் வீண்! வீண்!! வீண்!!! உன் திருவடியே சரணமென்று அடைந்தேன்.

'सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज ।
अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ॥'

என்று நீ அன்று பார்த்தனுக்கு உபதேசம் செய்தனையல்லவா. என்று இப்படியெல்லாம் கூவிக்கதறினேன். ஒருவரும் என்னை ரக்ஷிப்பாரில்லையா என்று அலறியும் பதில் காணாமல் மிக நொந்துகொண்டு கருணைக்கடலே! வெகுநாள் தவம் செய்த வஸுதேவ தேவகிகளுக்கு புதல்வனாய்த்தோன்றி அவர்களை ரக்ஷித்ததும் பொய்யா! தங்கள் பர்த்தாவுக்கு நேர்ந்த துன்பத்தைப் போக்க உன் திருவடிகளில் சரணாகதி அடைந்த நாக கன்னிகளுக்கு அபயம் அளித்ததும் பொய்யா? உன்னிடம் அபசாரப்பட்ட பிராம்மணர்களைக்காக்க

சரண்புகுந்த பிராம்மண பத்னிகளைக்காத்ததும் பொய்யா? ஒரு பிடி அவலை அமுதுசெய்து குசேலருக்கு குபேர ஸம்பத்தையும் மோக்ஷத்தையும் அளித்தது பொய்யா? வாலியிடமிருந்து பயந்து உன்னைச் சரண்புகுந்த சுக்ரீவனைக் காத்ததும் பொய்யா? என்றெல்லாம் புலம்பினேன். ஒருவரும் கேட்பாரில்லை. ஒருபுறம் கோபம் அதிகரித்தது. மற்றொருபுறம் பொறுமை ததும்பியது, சற்று கண்களை மூடிக்கொண்டு அசையாமல் நின்றேன். என் கண்முன் ஒரு அழகான ஸம்பாஷணை நிகழ்ந்தது.

தயாதேவி:- 'பரமனைப்பார்த்து, நாதா! குழந்தையின் கூக்குரல் தம் செவியில் படவில்லையா, ஏன் மௌனமாயிருக்கிறீர்கள்.

பரமபுருஷன்:— தயாதேவி! இந்த ஜீவன் பல பாபங்களைச் செய்திருக்கிறான், அதற்காக பல ஜன்மங்கள் எடுத்து அவைகளை அனுபவிக்கவேண்டியிருக்க எப்படி நாம் இவனை மன்னிப்பது? இவனை நாம் மன்னித்துவிட்டால் நம்மை பக்ஷபாதி என்று உலகம் பழிக்காதோ;

தயாதேவி:— நாதா! "ஒருதரம் என்னைச் சரண்புகுந்தவர்களை நான் கைவிடமாட்டேன்" என்று அன்று சொன்னீர்களே. அபபடியிருக்க தங்கள் திருவடிகளில் சரணாகதி செய்த இவனைத் தள்ளலாமோ? அப்படி நிராகரித்தால் வாக்குறுதியை மீறினவன் என்று தங்களை நிந்திக்கமாட்டார்களோ.

பரமபுருஷன்:— ஆம், தயாதேவி! நீ சொல்வது உசிதம், இவ்வனை ரக்ஷிக்க ஓர் உபாயம் சொல் பார்ப்போம்.

தயாதேவி:— நாதா! வேறு வழி என்ன இருக்கிறது. இவன் செய்த பாபங்களுக்கு தண்டனையாக இவன் அடையவேண்டிய பல ஜன்மங்களை தாங்களே எடுத்து துன்பங்களையும் அனுபவித்து இவனை ரக்ஷிப்பது ஒன்றுதான்.

பரமபுருஷன்:— ஸரி அப்படியே செய்வோம். அந்த ஜீவனைக் கூப்பிடு.

தயாதேவி:— குழந்தாய்! இங்கு வா. பயப்படாதே. என்று அழைத்தபோது மெள்ள லோகமாதாவினண்டை சென்று தலைவணங்கி ஸந்தோஷத்துடன் நின்றேன். தற்சமயம் எனக்குண்டான ஆனந்தத்தை அளவிட முடியுமோ? பரம்

புருஷன் என்னைப்பார்த்து குழந்தாய்! பயப்படாதே. நீ நம்மிடம் செய்த ப்ரபத்திக்கு மெச்சினோம். உன் பாபங்களையெல்லாம் மன்னித்துப் பரமபதம் தந்தோம். நீ பூலோகமே போய் வா. என்று திருவாய் மொழிந்தருளினார். இந்த ஸமயத்தில் திடீரென்று ஆரவாரம் உண்டாயிற்று. கண்களை விழித்துப்பார்த்தேன் ஸர்வேச்வரனுக்கு எதிர் முகமாக வேதஸ்வரூபனான கருடன் தோன்றி நின்றார். வேதப்ரதிபாத்யனான பகவானும் தயாதேவி, பெரிய பிராட்டியார் ஸஹிதமாய் லோகஸம்ரக்ஷணார்த்தம் பூலோகத்தில் உள்ள ஜீவராசிகளை அநுக்ரஹிக்க கருடாழ்வான் பேரில் அமர்ந்தார். உடனே எங்கும் பலத்த கரகோஷம்! நானும் இச் சுலோகத்தை அநுஸந்திக்கலானேன்.

अवतरणविशेषैरात्मलीलापदेशै-
रवमतिमनुकम्पे मन्दचित्तेषु विन्दन् ।
वृषभशिखरिनाथस्त्वन्निदेशेन नूनं
भजति शरणभाजां भाविनो जन्मभेदान् ॥

முகுந்த மாலை.

குலசேகரரின் உபதேசம்

(நடாதூர் ஸ்ரீதேசிகன்)

ஸம்ஸ்கிருத இலக்கியத்தில் ஸ்தோத்திர பாடங்கள் ஒரு மேன்மையான ஸ்தானத்தை வஹிக்கின்றன: ஸ்தோத்திரம் என்பது கவி தனது இஷ்ட தேவதையை மனதில் தியானித்து வெளியிடும் அனுபவங்களே. கவியின் மனோபாவத்தை ஸ்தோத்திரம் பிரதிபலித்துக்காட்டும். உயர்ந்த கருத்துக்களுடன் அழகிய ரீதியில் அமைந்திருந்தால் அதுவே காவியம் என்று எல்லோராலும் கொண்டாடப்படும். ஸாதாரணமான ஸ்தோத்திரங்கள் சில பக்தர்களை மட்டும் சந்தோஷப்படுத்தும். எல்லாக்கலைகளுக்கும் வேதப்ரமாணம் இருப்பதுபோல் ஸ்தோத்திரங்களுக்கும் உண்டு. ரிக்வேதத்திலிருக்கும் ஸ்ரீஸூக்தம், புருஷஸூக்தம் முதலியவைகளை ஆதிகால ஸ்தோத்திரங்கள் எனலாம். வேதவ்யாஸர், பாராசரர், சுகர் முதலிய

வர்கள் ஸஹஸ்ரநாமம் அஷ்டோத்திரங்கள் முதலியவை களை உலகத்தாருக்கு உதவினார்கள். பிறகு ஆசார்யர் கள் நமது ஸம்பிரதாயத்தை நன்ருக விளக்கிக்காட்டும் ஸ்தோத்திரங்களைச் செய்து அருளினார்கள்.

உலகவிஷயங்களிலேயே மனதைச்செலுத்தி வீணாக க்காலத்தைக்கழிப்பவர்களைப் பகவத் விஷயத்தில் திருப் புவதென்பது சாதாரண காரியமல்ல. ஜனங்கள் போ கும் வழியிலேயே விட்டு அவர்களைத்திருப்பவேண்டும். அவர்கள் நினைப்பது போலேயே சொல்லி, அவர்கள் போகும் வழி முதலில் சுகமானது என்று தோன்றிய போதிலும் வாஸ்தவத்தில் துக்கம் நிறைந்ததுதான் என்று விளக்கி அளப்பரிய ஆனந்தம் அனுபவிப்பதற்கு ஸ்ரீமந்நாராயணனை அடைவதுதான் ஒப்பற்ற உபாயம என்று உணரும்படி செய்யவேண்டும். இதுதான ஒவ் வொரு ஸ்தோத்திரத்தின் நோக்கம்.

அநேக ஸ்தோத்திரங்கள் பகவானுடைய குணக ணங்களை வர்ணித்திருக்கும்; பக்தனுடைய தைன்யமும் வெளியிடப்பட்டு இருக்கும். சில ஸ்தோத்திரங்கள் கருத் துக்கள் அவ்வளவு உயர்ந்ததாக இல்லாவிடினும் உயர்ந்த பதங்களால் ரசனைசெய்யப்பட்டிருக்கும். சில ரசனை அழகு இல்லாவிட்டாலும் உயர்ந்த கருத்துக்களை வெளி யிடும். இரண்டு குணங்களும் சேர்ந்த ஸ்தோத்திரங் களும் உண்டு. இவைகள் பண்டிதர்முதல் பாமரர்வரை யில் எல்லோருக்கும் இன்பமும் பயனும் அளிக்கும். இத்தகைய ஸ்தோத்திரங்களுள் முகுந்தமாலை தலைச்சிற ந்து விளங்குகிறது.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய ஸ்தோத்திரங்களுள் முகுந்தமாலைதான் முதலாவது ஸ்தோத்திரம் எனலாம். பிறகுதான் ஆளவந்தாருடைய ஸ்தோத்ரரத்னம், ஸ்ரீ பாஷ்யகாரருடைய கத்யத்ரயம் முதலியவைகள் தோ ன்றின. ஸ்ரீ குலசேகரர் வெறும் பக்தர் மட்டுமல்ல. அவர் ஒரு மஹா கவி. அவர் அரசர்களுள் கவி, கவிக

ளுக்குள் அரசர். அவர் அரசராக இருந்தபோதிலும் கர்வம், டம்பம், முதலிய கெட்ட குணங்கள் அவருக்குக்கிடையாது. ஏழைகளின் வாழ்க்கையையும் அதன் கஷ்டத்தையும் நன்கு உணர்ந்தவர். அவர்களின் மனோபாவத்தை முகுந்தமாலையில் ஆங்காங்கு விளக்கி இருக்கிறார்.

கவிகளுக்கும் வேதாந்திகளுக்கும் வாசியுண்டு, மனதைக்கவரும்படி எளிதில் புரியும் வகையில் அரிய கருத்துக்களைக் கவிகள் வெளியிடுவார்கள் அதற்கு உவமாதி அலங்காரங்களைக் கையாளுவார்கள். வேதாந்தியோ அத்தகைய கஷ்டம் ஒன்றும் எடுத்துக்கொள்ளமாட்டார். விஷயத்தை உள்ளபடியே சொல்லிவிடுவார். ஞானமுள்ளவருக்குத்தான் அது புரியும், மற்றவர்களுக்கு அது புரியாது. கஷ்டப்பட்டுத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். ஸ்ரீ குலசேகரர் ஒரு வேதாந்தியும் கவியும் ஆவர். மனோஹாரமான அலங்காரங்களைக்கோர்த்து ரமணீயமான பதங்களை உபயோகித்துத் தன்னுடைய வர்ணனையின் ஸாமர்த்தியத்தினால் எப்பேர்ப்பட்ட நாஸ்திகனையும் நல்வழியில் திருப்பிவிடுகிறார் உலகத்தாருக்கு அவர் சொல்லியிருக்கும் சில அரும் உபதேசங்களைப்பார்ப்போம்.

1 பகவத் ப்ரார்த்தனை.

ஆரம்பத்தில் பகவானை வேண்டுகிறார். என்ன கேட்கிறார்? அதைக்கொடு, இதைக்கொடு என்று கேட்கவில்லை. எப்பொழுதும் பகவந்நாமத்தைச் (ஸ்ரீவல்லபேதி) சொல்லிக்கொண்டே இருந்தால் போதும் என்கிறார். எத்தனைதரம் ஜன்மம் எடுத்தாலும் எந்த ஜன்மம் எடுத்தாலும் சுவர்க்கத்தில் சுகமும் நரகத்திற்கே போய் கஷ்டம் அனுபவித்தாலும் பகவானுடைய திருவடியை எப்பொழுதும் தியானித்துக்கொண்டு இருக்கவேண்டுமாம்; ஆமாம்; மரணஸமயத்திலும் கூட அந்த தியானம் இருக்கவேண்டுமாம் (திவிவா, புவிவா). அவர் பெரிய மஹாராஜாவாயிற்றே யதேஷ்டமாக தானம் செய்யலாம், புண்ணியம் ஸம்பாதிக்கலாம். ஸுக போகங்களை

யுமனுபவிக்கலாமே. அதெல்லாம் ஒன்றும் வேண்டா மாம். அப்படி ஒருவேளை பகவானின் கட்டளையினால் ஸ்வர்க்கத்திலோ பூலோகத்திலோ, ராஜபோகம் அனு பவிக்க நேர்ந்தாலும் ஸ்ரீமந்நாராயணனின் திருவடித்தாம ரையின் தியானமே எப்பொழுதும் இருக்கவேண்டும் என் றார் (நாஸ்தா தர்மே ந வஸுநிசயே).

ஸ்ரீ குலசேகரர் பகவத்பக்தியில் ஈடுபட்டு பகவந்நா மத்தின் முக்கியத்வத்தையும், தியானத்தின் மேன்மை யையும் ஆணித்திறமாகச்சொல்லுகிறார், இப்படிச்சொ ல்லுவதற்கு அவர் மனதில் எவ்வளவு திடமான பக்தி யிருக்கவேண்டும் ? அவர் பகவத் பக்தியிலேயே முழுகித் திளைத்து இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது.

2 ஸம்ஸாரம்.

ஸம்ஸாரத்தைப் பலவிதமாக வர்ணித்து அதிலிரு ந்து கரையேறுவதற்கு உபாயத்தையும் சொல்லுகிறார்.

ஸம்ஸாரத்தை ஒரு பாலைவனமாக எண்ணுகிறார். பாலைவனத்தில் குடிப்பதற்கு நீர் அகப்படாது. அங்கு ஒருவனுக்கு வேண்டியது நீர் நிலைதான். அதைக்கண் டால் அவன் அடையும் ஸந்தோஷத்திற்கு அளவேயில்லை. பாலைவனத்தில் வெகுதூரம் அலைந்தவன்; வழியில் ஒரு ஏரியைக்கண்டால் அதில் இறங்கி ஜலம் அருந்துவான்; பிறகு களைப்பாறுவான். ஸம்ஸாரமே ஒரு பாலைவனம். அதில் திரிந்து கஷ்டப்படுகிறவர்களுக்கும் ஒரு ஏரியைக் காட்டுகிறார் குலசேகரர். அந்த ஏரி ஸ்ரீஹரிதான். ஏரியில் அலை, தாமரைப்பூ, மீன்கள், ஜலம் எல்லாம் இருக்கும். இங்கேயும் அவைகள் இருக்கின்றன. ஸ்ரீஹரியின் திரு வடிகளும் திருக்கைகளும் தாமரைகள்; அழகிய கண்களே மீன்கள்; நமது களைப்பைப்போக்கும் அவருடைய புஜங் களே அலைகள்; அவருடைய அழகின் ஒளியே ஜலப்ரவா ஹம். என்ன ஆச்சர்யமான ஏரி இது! இதில் முழுகி னால் எல்லா கஷ்டங்களும் தீர்ந்து விடும். (கரசரண ஸரோஜே).

பாலைவனத்தில் திரிந்தவனுக்குத்தான் ஜலத்தின் அருமை தெரியும். நாம் பாலைவனத்தைப்பற்றிக்கேட்டும் படித்தும் இருக்கிறோம். இந்தியா முழுவதுமே ஓர் செழிப்பான கண்டம். ஸிந்துமாஹாணம், ராஜபுதனம்போன்ற ஏதோ சில இடங்களில் மட்டும் தான் பாலைவனத்தின் ஒரு அம்சம் இருக்கிறது என்று சொல்லலாம். அங்கு சென்றவர்களுக்கு பாலைவனத்தைப் பற்றி ஒரு வித அபிப்பிராயம் ஏற்படலாம். ஸ்ரீ குலசேகரர் ஆண்ட தேசமோ மலையாளத்தில் மிகவும் செழிப்பானது. அங்கு தரிசான நிலமேகிடையாது. அவ்விடத்தில் வஸித்த இவர் பாலைவனத்தைப்பற்றி எழுதுவது மிகவும் ஆச்சரியமான விஷயமல்லவா. தானே பாலைவனத்திற்குச்சென்று கஷ்டத்தை அனுபவித்தவர்போல் எழுதுகிறார். அவருடைய பரந்த உலக அறிவையும் பிறர் அனுபவத்தை அறியும் திறனையும் இது காட்டுகிறது.

இப்பொழுது அலங்காரத்தை மாற்றுகிறார். உலகப் பிரஸித்தமான உவமைதான் இது. ஆனால் இவர் கையாளும் திறமையே வேறு. ஸம்ஸாரம் பெருங் கடலாக மாறிவிடுகிறது. அதில் மனிதன் நீந்துகிறான். ஸுகம் துக்கம் ஆகிற இரட்டையே கடும்புயல். பிள்ளை பெண்டாட்டி முதலியவர்களைக் காப்பாற்றுவதாகிற பாரம் இவனைக் கீழே அமுத்துகிறது. உலக விஷயமாகிற ஸமுத்ரத்தில் அகப்பட்டுக்கொண்டு தவிக்கும் ஜீவன் விஷ்ணு என்கிற ஓடத்தில் ஏறிக்கொண்டால்தான் தப்பலாம் என்கிறார். (ஸவஜஂயிமதாநாழ) (தொடரும்)

யதுநாதன்.

[S. T. ஸ்ரீநிவாஸாசாரியார் M. A, வித்வான் L. T.]

———:0:———

[முன் தொடர்ச்சி.]

அவன் கையைப்பிடித்தார். இவன் பெரிய கேடிப் பேர்வழி. பாத்திரம் இவனுக்கு எப்படி வரும். ஸந்தேஹப் பட்டேகேட்டேன். புரிந்துவிட்டது" என்று ஓங்கி மற்றோர்

அறை கொடுக்கப்போகையில் யதுநாதன் குறுக்கிட அந்த அடி அவர்கையில் வீழ்ந்தது. அவர் புன்னகைகொண்டார். "ராமு! இவன் தந்தை மிகவும் ஏழையாம், படுத்த படுக்கையாம், என்னை யிவன் யாசித்தான். நான்தான் இந்த பாத்திரத்தை இவனுக்குக் கொடுத்தேன். பையன்மேல் ஏதுங் குற்றமில்லை என்றார்". ராமு அதைச் சொல்லித்தொலைப்பதற்கென்ன ? குய்யோமுறையோ என்று ஊளையிடுகிறான். என்று உள்ளேபோனான். பாத்திரத்தைஎடுத்துக்கொண்டு ஜாக்ரதையாய் வீடுபோய் சேருங்கள் என்று சொல்லித் திரும்பிக்கூட பாராமல் போய்விட்டார் யதுநாதன்.

சோளதேசத்தில் காவிரி நன்னதிக்கரையில் திருவிந்தளூரில் ஸ்ரீய:பதியான பேரருளாளனுக்கு விமர்சையான உத்ஸவம் ஐப்பசிமாதத்தில் நடப்பது கேழ்வையுற்று யதுநாதன் புறப்பட்டு ஸேவிக்க இச்சைகொண்டார். ஒருநாள் இரவு யதுநாதன் ஸ்ரீ பேரருளாளன் ஸந்நிதியினின்றும் திரும்புங்கால் ஸ்ரீ தேசிகன் ஸன்னிதி வலப்புறம் ப்ராகாரத்தில் சிறிது நேரம் உட்கார்ந்தார். மனம் ஏதோ நினைத்தவண்ணமிருந்தது. சற்று அப்பாற் பின்புறம் இருமாதர் பேசிக்கொண்டிருந்தனர், ,'ஆமாம் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல் நமக்கெல்லாம் இந்த ஆசை எதுக்கடி ? குழந்தை பட்டணத்திலிருந்து வரான்னு கேழ்வைப்பட்டு வரவேண்டாமென்று எழுதிவிட்டேன், தீபாவளி என்று தலை நிறைய எல்லாரும் எண்ணெய் தேய்த்துக்கொள்ள முடியுமா கஷ்டப்பட்டுக் கொஞ்சம் பக்ஷணம் பண்ணப்போகிறேன், அவ்வளவுதான். குழந்தைகள் எண்ணெய் மாத்திரம் தேய்த்துக்கொள்ளவேண்டியதுதான், ஸ்ரீ வரதன் இந்த நிலைமையிலாவது இந்த ஊரைவிட்டு அப்பால் தள்ளாமல் கிருபைசெய்தானே அதைச்சொல்லு. குழந்தைகள் உள்ள நமக்கு என்ன வேண்டியிருக்கிறது. நாளுங்கிழமையும். "என்று தழதழத்த குரலில் சற்று அழுதவண்ணம் சொல்லிவந்தாள். அங்கே ஒரு பையன் வந்தான். அவன் வந்த உடன் பெண்கள் எழுந்து நடந்தனர். யதுநாதன் அப்பையனைக்கூப்பிட்டு ஏதோ விசாரித்தார். அவர்களின் வீடும் தெருவும் குடும்பநிலைமையும் கேட்டறிந்தார். திருவிந்தளூர் போகும் கருத்தை மாற்றிக்

கொண்டார். மருவினியமைந்தனிந்திருவுள்ளம் ஓர் ஏழைக் குடும்பத்தை இன்பப்படுத்தினுல் சால உகக்குமென்று ஏதோ சொல்லிக்கொண்டார்.

அந்தமாதம் தீபாவளியன்று ஆனைகட்டித்தெருவில் ஓர் ஏழைக்குடும்பமானது மங்களஸ்னனம் செய்யும் ஸமயம் ஓர் ப்ராம்மணன் அந்தவீட்டுக்காரரிடம் ஓர்வஸ்த்ரமூட்டையைக் கொடுத்து "ஸ்ரீ தேவாதிராஜன் அனுக்ரஹம் பெற்றுக் கொள்ளும்" என்று போயினர். வந்தவர் யாரென்று வீட்டுக்காரருக்குத் தெரியும். அவரது தயாமயமான ஹ்ருதயத்தைக் கொண்டாடியவண்ணம் அக்குடும்பம் தீபாவளியைக் கொண்டாடியது. இதுவே இந்தளூரப்பன் இனிதுகந்தது என்று யதுநாதனும் மகிழ்ந்தார்.

தேவராஜனது திவ்யாலயத்தில் ப்ரதி வெள்ளிக்கிழமையும் வரதாசாரியஸ்வாமியின் உபன்யாஸம் காதில்தரித்த சங்க சக்ரக் கடுக்கன்கள் துவாதசபுண்ட்ரம். மைஸூர் சால்வை ப்ரபலமான வித்வான்களெல்லாம் கூடினர். யதுநாதன் நிர்பந்தமாய் போகவேண்டிவந்தது. நூற்றுக்கால் மண்டபத்தில் உபன்யாஸம் பிரதிதினமும் தர்க்கரீதியாக ஸர்வேச்ரனது பரத்வத்தையும் அவனுடைய எல்லையில் குணங்களையும் உபநிஷத்துக்களிலிருந்து விரித்துரைத்துக் காட்டுவார். கேட்கிற ஜனங்களுக்கு ஒன்றும் புரிவதில்லை. ஏதோ கட்டுப்பாட்டிற்கு வந்துகொண்டிருந்த ஜனங்கள் இறுதியில் குறைந்து குறைந்து ஒரு எட்டுப்பத்து பெயருக்கு மேல் இல்லாமற் போய்விட்டது. ஒருநாள் ஏதோ பரீக்ஷார்த்மாய் யதுநாதனை ஒரு வெள்ளிக்கிழமை பேசும்படி வரதாசாரியர் நிர்பந்திக்க அனேகதடவைமறுத்த அவர் இறுதியில் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிற்று. நாற்பது ஐம்பது ஜனங்கள் இருந்தனர். யதுநாதன் ஸ்ரீ பேரருளாளனது பாத்ராபாத்ர பராமர்சமற்ற அருளையும் அவனை நம்பியவர்கள் பெறும் எல்லையற்ற இன்பத்தையும், வேண்டியவர் வேண்டாதவர் என்ற பாகுபாடற்ற அவன் ஹ்ருதய வைசால்யத்தையும், பாபிகளுக்கு மன்றுவேதையே மாபெரும் பாக்கியமாகக் கொண்ட ஸ்ரீ பெருந்தேவி அவனுக்கு ஸஹசரியான பெருமையையும் ஸ்ரீ ஆழ்வார்களின் ஸர்வதோமுகமான கருணையையும், ஸ்ரீய: பதியே ப்ராப்ய ப்ராபகனென்ற அவர்களது துணிவையும்,

அனுதாபம் ஒன்றால் அரும் பாபங்களெல்லாம் மன்னிக்கப் படும். அதனால் யாவரும் வருந்தாமல் சரமச்லோகத்தைத் திண்ணமாய் பிடித்து ஒழுகவேண்டுமென்றும் ஸரளமான நடையில் சொல்லி எந்த நிலையிலும் ஸ்ரீ தேவாதிராஜனை மறக்கக்கூடாதென்று அதற்கு உபபலமாகக் "கண்டாரி கழ்வனவே காதலன்தான் செய்திடினுங் கொண்டானை யல்லாலறியாக் குலமகள்போல்" என்ற பாசுரத்தை இனிய ஹரிகாம்போதியிற் பாடி ஆலாபன வ்யாஜமாய் ஸ்ரீ வரதனைக் குறித்து உருகிக் கதறினார். ஜனங்கள் சித்ரார்ப்பிதமான நிலைமையிற் கேட்டு மெய்மறந்தனர். கண்ணீர் தாரை தாரையாய் விட்டனர். உபன்யாஸ முடிவில் நாலுகால்மண் டபம் வஸந்தமண்டபப் படிக்கட்டுகள் அனந்த ஸரஸ்போகும் மார்கம் இங்கெல்லாம் குழுமி ஜனங்கள் கேட்டுநின்றனர். மறுநாள் வெள்ளைக்குளத்தில் இதே பேச்சு "என்ன உபன் யாஸம் எப்படி". "எப்படி என்ன! ஆண்டிப்பண்டாரங் களுக்காகவே ஏற்பட்ட உபந்யாஸம். ப்ராம்மண ஜன்மமாய் பிறந்தவன்! ஒரு சாஸ்த்ர மர்யாதையான வ்யவஹாரம் உண்டா. ஏதோ பெரிய காஞ்சீபுரம் மடத்து ஆண்டிகள் தேவாரம் பாடுவதுபோல் இருந்தது" என்றார் ஹ்ருஷீகேச சாத்வரி.

"ஆமாம்! ஆமாம்! இந்தக்கூத்திற்கு நம் சாஸ்த்ர பஞ் சானனம் வரதாசாரியர்கூட இருக்கும்படியாச்சே! பாட்டியம் மாக்கள்போல் கொஞ்சம் ப்ரபந்தப்பாடல் நடந்தது" என்றார் ஸாமியாச்சார். "பேசவந்தானே இவனுக்கு காவ்யஞான மாவது உண்டா. உயர்ந்த தர்க்க முறையில் ஒரு ப்ரச்னம் ஸமர்த்திக்க முடியுமா. சீ சீ வெட்கக்கேடு! எத்தனை தமிழ்ப் பாடல். என்றார்" தாமோதராச்சார் "அவன்பேரில் பிசகில்லை. எனக்குப் பேசத்தெரியாதென்றான். நான்தான் வற்புறுத்தி னேன். ஸிம்ஹங்கள் கர்ஜித்த கோயிலில் இந்த அக்ஞனைப் பேசவிட்டால்" என்றார் வரதாச்சார் ஸ்வாமி அவர் கண்களில் பொறாமை கூத்தாடியது.

(தொடரும்.)

ஸ்ரீதேசிக ஸம்ப்ரதாயம்.

(தொடர்ச்சி)

‘ப்ராஸ்ருதம் பாதவி ப்ராஸஹஸ்ரம் ஸ்ரீவேங்கடநாதாய க்ருதா: வ்யவஸாயா: ।’

என்றபடி அநந்தங்களான இத்தகைய அழியாத மதில் கொண்டு அழகுடன் துலங்கும் இந்தக் கோயிலை நமக்குத் தந்தருளிய ஆசார்யனுக்கு நாம் செய்யக்கூடிய ப்ரத்யுபகாரந்தானென்ன? இந்த ஸம்ப்ரதாயக் கோயிலில் புகுந்து நாமெல்லாம் நற்கதிபெற்று மகிழ்வதுதான் நாம் ஸ்ரீதேசிகனுக்குச் செய்யக் கூடிய ப்ரத்யுபகாரம். ஸ்ரீதேசிகன் க்ரந்தங்களை ஸேவித்து மகிழ்வது நமக்கு ஸ்வரூபப்ராப்தம். ஸேவித்து மகிழாவிடில் ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் நம்மைப்பழித்ததுபோல் நம்மை உலகமும் பழிக்கும். இந்த ஸ்ரீ அப்பைய தீக்ஷிதர் யார்? அவர் ஏன் நம்மைப் பழித்தார்? அப்பைய தீக்ஷிதர் ஒரு பெரிய பண்டிதர். அத்வைத மதத்தைச் சேர்ந்தவர். ஆயினும் பரமரஸிகர். சந்த்ரவம்சத்திற்பிறந்த ஸ்ரீ சின்னதிம்மராஜன் என்னும் அரசன் ஸ்ரீ தேசிகனுடைய யாதவாப்யுதய காவ்யத்தை ரஸிகர்கள் கொண்டாடக் கேட்டு, “நீர் இதற்கொரு வ்யாக்யானம் பண்ணிக் கொடும்,” என்று ப்ரார்த்திக்க, அதன்மேல இந்த க்ரந்தத்தைப்பார்த்தார். அப்போது தான் இந்த க்ரந்தம அவருக்குக் கிடைக்கலாயிற்று. க்ரந்தத்தைப் பார்த்தவுடனேயே அதனுடைய கவிதையிலும் பாவங்களிலும் ஈடுபட்டுப் பரவசரானார். வ்யாக்யானத்தையுபக்ரமித்து சில ச்லோகங்களுக்குச் செல்லு முன்னமேயே, வ்யங்கிய ப்ரதானமான காவ்யமாகையால், பதத்துக்குப்பதம் பாவங்கள் யதேஷ்டமாகத் தோன்றுவதைக் கண்டார்.

‘அஸ்லேஷம் விவித்ய: ஸவச்ச பாவா: ஸந்தி பதே பதே ।
கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய காவ்யேஷ்வேதத் அசேஷத: ॥’

என்று அவசரமாகப் புகழ்ந்தார். கடைசியில் இந்தக் காவ்யத்தை, ஸர்வோத்க்ருஷ்டமான காவ்யத்தை, ரஸிகர்களெல்லாம் ‘இரைத்துவந் தமிழ்தில் மொய்க்கும் ஈயின

மென்ன வந்து அநுபவிக்க வேண்டிய காவ்யரத்னத்தை இதுவரையில் உலகத்திற்குக் காட்டாமல் தாங்களும் அநுபவிக்காமல் இருந்தார்களே இந்தராஸிக்யமே இல்லாத ஜனங்கள்! ஐயோ! இவர்கள்கையில் இந்தக்காவ்யம் அகப்பட்டது நபும்ஸகன் கையில் ரம்பை அகப்பட்டதுபோலல்லவா ஆயிற்று என்று வருந்தினாராம். இத்தகைய ஸூக்திகள் நமக்குக்கிடைத்திருப்பது ஒரு தாயதனக்ரமத்தில், ஒரு தாயத்தைப் பல ஸகோதரர்கள் ஒற்றுமையாக இருந்து அநுபவிப்பதுபோல் ஸ்ரீ தேசிகன் திருவடிகள் அனைவரும் இந்த ஸூக்திகளை அநுபவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஒரு தாயத்துக்கிட்டுப் பிறந்த நாமெல்லாரும் ஸஹோதரரன்றோ?

'𑌪𑌰𑍈𑌃 𑌪𑌰𑌿𑌭𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍇 𑌵𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌂 𑌶𑌤𑌮𑍍 ।
𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌤𑍁 𑌵𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚 𑌚 𑌤𑍇 𑌶𑌤𑌮𑍍 ॥'

என்கிற யுதிஷ்டிரர் வாக்யத்தை யநுஸரித்து ஸ்ரீ தேசிகன் திருவடிகளாகிற நாமெல்லாம் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண விஷயத்தில் ஒற்றுமையோடிருந்தால் நமது பலத்தைக்கண்டு ப்ரதிவாதிகள் நடுங்குவார்கள்.

சிலகாலத்துக்கு முன்பு ஸ்ரீ தேசிகன் திருவடிகளாகிற நாமெல்லாம் நெல்லிக்காய்களைப்போல் சிதறிக்கிடந்தோம். இவர்களும் ஒன்று சேர்வார்களோ என்று ஆச்சர்யப் பட்டதும் உண்டு. திடீரென்று ஏற்பட்ட சில சந்தர்ப்பங்கள் நம்மவர்களுக்குள் ஒரு தாத்காலிகமான ஒற்றுமையையுண்டாக்கியது. அதன் பயனாக இந்த ஸம்ரக்ஷிணியும் அவதரித்தது. ஸம்ரக்ஷிணி இப்போது நம்மை ஒற்றுமை என்னும் குணத்தால் (கயிற்றால்) பிணைக்கின்றது. இந்த ஸம்ரக்ஷிணி "பல கோடி நூறுயிர" மாண்டுகள் ஸர்வோத்க்ருஷ்டமாகத் துலங்குமாறு அருள் புரியவேண்டி எம்பெருமானை இறைஞ்சுவோம். ஸ்ரீ தேசிகனையும் வாயார வாழ்த்துவோம்.

(பல்லவி.) வாழ்க தூப்புல் வேங்கடவன் வாழ்க வாழ்கவே,

தர்சனமென் றுலகம்போற்றும் கோயில் கட்டினான்
ஞானமென்று மதனைச்சூழ்ந்தோ ரகழி வெட்டினான்
பக்தியென்றும் ப்ரபத்தியென்று மதனுள் நாட்டினான்
பாரின்மாக்கள் முத்திகாணும் நெற்றியைக் காட்டினான்,

———

திருப்புட்குழி ஸ்வாமியின் திருநக்ஷத்திர மஹோத்ஸவம்.

சென்ற ஐப்பசிமீ 6வ ஸ்ரீகாஞ்சியில் ஸ்ரீரங்கராஜவீதி ஸ்ரீதேசிகன் ஸன்னிதியில் ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமியின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் மஹநீயர்களின் மஹோத்ஸவங்களில் மஹோத்ஸாஹம் கொண்ட மஹாநுபாவராகிய ஸ்ரீதேசிக தர்சனரத்நதீபம் ஸ்ரீமான் வி, வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியால் விலக்ஷணமாக நடைபெற்றது. ஸ்ரீதிருப்புட்குழிஸ்வாமியின் இரண்டாவது ஷஷ்ட்யப்தபூர்த்தியென்பது பற்றி ஸ்ரீ உப வே. வித்வான் ஐயா க்ருஷ்ணஸ்வாமி தாதாசாரியரெனும் இவருடைய ஆசார்யஸ்வாமியால் நியமிக்கப்பெற்று ‘[illegible]’ என்றபடி நடத்தப்பட்டது. புரட்டாசிமீ 27வ முதலில் [illegible] என்ற ரீதியில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ஆசார்ய விஷயமாய் உபந்யாஸங்கள் நடந்தன. திவ்ய ப்ரபந்த வேதபாராயணங்களும் திவ்யமாக நடந்தன. சாத்துமறைகளில் இருமறைகளையும சாத்தும் முறையும் இறையும் விடாது ஸேவை, பாராயணங்கள், உபந்யாஸங்கள் ஸ்தோத்ரபாடங்கள் கோஷ்டிவிநியோகங்கள் ததீயாராதனங்கள் ‘ஒழுவில் காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமைசெய்யும் வைகுண்டமோ’ என்று வாதிக்கப் பட்டிருந்தது ஸ்ரீகாஞ்சிநகரம். ஸ்ரீஐயா க்ருஷ்ணமாசார்யஸ்வாமி முதலான வித்வான்களா பெருமாள் பிராட்டி முதலானவரின் பெருமை பெரிதும் பேசப்பட்டது. ஐப்பசிமீ 3வ ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீகார்யம் வித்வான் அ. நரஸிம்மாசார்யஸ்வாமியால் ஸ்ரீ ஆதிவண்சடகோபமஹாதேசிகன் வைபவமும் 4வ ஸ்ரீ உப வித்வான் குமாரதாதாசாரியர் ஸ்வாமியால் ஸ்ரீலக்ஷ்மீகுமாரதாததேசிகன் வைபவமும், ஸ்ரீமான் எஸ். டி., ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியால் ஸ்ரீஸங்கல்பஸூர்யோதய ஹரிகதா காலக்ஷேபமும் நடந்தன. ஸ்ரீஸூர்யோதயத்தை ஹரிகதையாக நடத்தும்படி செய்த பெருமை ரஸிக ரத்நம் ஸ்ரீ வி. வி. ஸ்வாமியினுடையது. ஸ்ரீ எஸ். டி. ஸ்வாமியோ எப்படியிலும படியுமியல்புள்ளவராகையால் இவருக்கு இதுபெரிதல்ல. இவரே 6வ ஆச்லேஷத்தன்று அபரதேசிகனாகிய ஸ்ரீதிருப்புட்குழி ஸ்வாமியின் சரித்ரத்தைஹரிகதையாகக் கேட்பவர்

மனமுருகும்படி நடத்தினர். 5உ அடியேன் குலதைவமான ஸ்ரீமத் ஆண்டவன் வைபவத்தை அறிந்தவரை பிதற்றினேன்.

ஸ்ரீ தேசிகன் ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயத்தில் ஸாக்ஷாத்ஆச்சார்யசிஷ்யஸம்பந்தம் பெற்றதில் பூர்ணத்ருப்தியில்லாதது பற்றி ஸ்ரீயதிராஜனும் ஸ்ரீதேசிகனும் ஆசார்யசிஷ்யர்களான பெரியாண்டவனெனும் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனாகவும் ஸ்ரீதிருப்புட்குழிஸ்வாமியாகவும் அவதரித்தனரென அவதார ரஹஸ்யவேதிகள் அறிவிக்கிறார்கள். 5உயன்று ஸ்ரீமத்ஆண்டவன் திருநக்ஷத்ரமும் அடுத்த தினம் அபர தேசிகன் திருநக்ஷத்ரமும் அமைந்திருப்பதே இதை உறுதிப்படுத்துகின்றது. 6உயன்று ஸ்ரீரங்கம் சர்மாவெனும்ஸ்ரீமான் திருமலை தாதாசாரியர் பொருளைப் பொருட்படுத்தாது ஸ்ரீரங்கராஜவீதியில் கோயில்கொண்டிருக்கும் ஸ்ரீ பரமபரி· ஸ்ரீதேரழுந்தூர் ஆண்டவனுடைய ஸ்ரீ பாதுகாச்ரமத்திலிருந்து ஸ்ரீமத் பெரியாண்டவன் படத்தை பல பிருதுகளோடு ஸ்ரீதிருப்புட்குழி ஸ்வாமி ஆச்ரமத்தில் எழுந்தருளப்பண்ணி ஸ்ரீபாதுகை ஸந்நிதியில் பெரியாண்டவன்ஸம்பாவனை செய்து தகுந்த ததீயாராதனமும் தாமேவந்து நடத்தியது விசேஷமாகும். மற்ற நாட்களிலும் மஹான்களையுபசரித்தது மறக்கற்பாலது. 7உ காலையில் ஸ்ரீதூப்புல் அடிவாரம், திருப்புட்குழி ஸ்வாமியுமின்றி வேறு அறியாத ஸ்ரீஜடாப்ரம்மசாரி ஸ்வாமியின படத்தை திருவஹீந்திரபுரம் வக்கீல் ஸ்ரீமான் தி. ஈ. சடகோபாசாரியர்ஸ்வாமி திறனுடன்பேசித்திறந்துவைத்தார். பின்பு ஸேவை பாராயண உபந்யாஸஸ்வாமிகளுக்கு நூல் விலை அதிகமாயினும் இதைவிட ஸ்வாமிகளின் நூல்விலை அதிகமென்றறிந்து தனத்தைச் சேகரித்து தீபாவளிக்கு முன் பணம் பெற்ற ஆடைகளையும் பணங்களையும் அளித்த ஸ்ரீ வி. வி. ஸ்வாமியின் வள்ளல் தனத்தை வரைய எவராலாகும். இவ்வுத்ஸவத்தில் மதுரை ஸ்ரீமான் என். ஆர். க்ருஷ்ணஸ்வாமிஅய்யங்காரின் தொண்டைமண்டலச் சிறப்பும, பந்தல்குடி ஸ்ரீமான் திருமலை அய்யங்காருடைய வாழ்த்துப்பாவும் மிக்க அழகும் கம்பீரமும்வாய்ந்தவை. ஸ்ரீ வி. வி. ஸ்வாமி ஜ்வரத்தால் முன் வர முடியாதிருந்தும் இவ்வுத்ஸவத்தைப் பொருமையுடன் நிர்வஹித்த பெருமை திருவஹீந்த்ரபுரம் நயினு என்கிற K. V. ஸ்ரீநிவாஸய்யங்காருடையது. ஸ்ரீமான்கள் இரண்டுநரஸிம்மதாதாசாரியர்களின் ச்ரத்தையும் கொண்டாடத்தகுந்தது. திருநக்ஷத்ரத்தன்று ஸ்ரீதேசிகன் வீதி உத்ஸவம் வேதபாராயண அத்யாபகத்துடன் கண்டருளினர்.

(ஸம்பாதகர்)

ஓடவேண்டியிருந்தது. இவனோடு யுத்தம் செய்து ஜயம்பெறு வதில் நாங்கள் நைராச்யத்தை முன்பேயடைந்துவிட்டோம். இவன் தன்னுடைய ப்ராக்ஜ்யோதிஷப் பட்டணத்தை விட்டு ஸ்வர்கத்தை நோக்கிப் புறப்படுவதை நாங்கள் உடனே தெரிந்துகொண்டு ஆண், பெண் எல்லோரும் வீடுகளைக் காலிசெய்து இவன் வருவதற்கு முன்பே யோடிப்போய்விடு வது வழக்கம். இவனடித்திருக்கிற அடிகளை நினைத்து இவனை நேரில் பார்ப்பதே எங்களுக்கு அஸாத்யம். அவன் வரும்பொழுது ஸாக்ஷிகளாய் நாங்கள் பார்க்க முடியாது. சேதனங்களான ஐராவதம் உச்சைச்ரவஸம் முதலிய தும் எங்களோடு ஓடிப்போய்விடும். அசேதனங்களான வீட்டிலுள்ள புருஷாக்ருதியான பொம்மைகள் தானிவன் வரும்பொழுது ஸாக்ஷிகளாயிருக்கும். பொம்மைகள் கூட பயப்படுகிறன. ஆனாலவற்றிற்கு ஓடச் சக்தியில்லை. 'ப்ரதா விதும்' ஸாமாந்ய ஓட்டத்திற்கு ப்ரஸக்தியேயில்லை. யாவ ரும் தலைதெரிக்க ஓடவேண்டியதுதான். இங்கே 'அஸ்ய' இவனுடைய என்று பேசுவதில் ரஸமுண்டு. மிக்க பயத் தால் இதோ ஓடிவந்துவிட்டானே என்று பயந்து சொல் லும் ப்ரகரணம். 'வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பச்யாமி'

𑌮𑌹𑌤𑌾 𑌮𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑍇𑌨 𑌵𑌜𑍍𑌰𑍇𑌣 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌨𑌿𑌲𑌿𑌲𑍍𑌯𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌭𑌰𑌣𑌵𑌰𑍍𑌷𑍍𑌮𑌣𑌾 ॥ ௨௨

மஹதா மத்ப்ரயுக்தேந வஜ்ரேண ஜ்வலிதாத்மநா ।
நிலில்யே தஸ்ய தோர்மத்யே நிஷ்காபரணவர்ஷ்மணா ॥

(ப-ரை) மத்ப்ரயுக்தேந- என்னாலெறியப்பட்டு, ஜ்வலி தாத்மநா- ஜ்வலிக்கும் ஸ்வரூபத்தையுடைய, மஹதா வஜ் ரேண- மஹாமஹிமையையுடைய வஜ்ராயுதம், தஸ்ய-அவனு டைய, தோர்மத்யே- மார்பில், நிஷ்காபரணவர்ஷ்மணா- பொன்னலங்காரரூபத்தோடு நிலில்யே-மாறி வீற்றிருக்கை.

(தா-ம்) அஷ்டதிக்பாலகர்களான நீர், அக்நி, யமன் முதலியவர்களவனைத் தகையக் கூடாதோ? 'யோ வஜ்ரபா

தாசனி ஸந்நிபாதாத்’ என்கிறபடி வஜ்ராயுதம் மேல்விழுவது இடி விழுவது போன்றதென்பரே. இந்த சங்கைக்கு பதில் கூறுகிறார். ‘இந்த்ரோ மஹேந்த்ர: ஸுரநாயகோ வா’ என்று பேசப்படும் நானுமிருந்தேன். வஜ்ராயுதமுமிருந்தது. என் வஜ்ராயுதத்தை நானே ப்ரயோகித்தேன். அதன் மஹிமை ப்ரஸித்தம் தான். அவன் மார்பிலேயே குறி வைத்து ப்ரயோகித்தேன். என் வஜ்ரமும் சீறிச்சினந்து ஜ்வாலாமயமாய் அவனையணுகிற்று. அதன் வலிமைக்கு ப்ரளயம் வந்துவிட்டது. அவன் பலத்தின் மஹிமையால் வஜ்ரத்தின் மஹிமை லயித்து விட்டதுமல்லாமல் அதுவே பொன்னாபரண ரூபமாக மாறி அவன் மார்புக்கு அலங்காரமாகிவிட்டது.

𑌤𑍍𑌵𑌤𑍍𑌕𑍋𑌪 𑌇𑌵 𑌦𑍀𑌪𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌜𑍍𑌵𑌲𑌨𑍋 𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 ।
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑌿𑌙𑍍𑌗𑌣𑌵𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌦𑍍𑌯𑍁𑌮𑌣𑍇𑌰𑌿𑌵 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥ ௩௪

த்வத்கோப இவ தீப்தோபி ஜ்வலனோ ந ப்ரகாசதே ।
ஜ்யோதிரிங்கணவத்தஸ்ய த்யுமணேரிவ ஸந்நிதௌ ॥

(ப-ரை) தஸ்ய- அவனுடைய, ஸந்நிதௌ- அருகில், த்வத்கோப இவ- உம்முடைய கோபத்தைப் போல் தீப்தோபி- மண்டி எறிந்தாலும், ஜ்வலந:- அக்நி, த்யுமணே:- ஸூர்யனுடைய, ஸந்நிதௌ-ஸந்நிதியில், ஜ்யோதிரிங்கணவத்-மின்மினிப் பூச்சியைப்போல, ந ப்ரகாசதே- ப்ரகாசம் பெறுகிறதில்லை.

(தா-ம்) ‘ந தத்ர ஸூர்யோ பாதி’ உம் ப்ரகாசத்துக்கு முன் ஸூர்யனும் ஒளி பெறமாட்டான். ஸூர்யன் முன்பு மின்மினிப் பூச்சி ஒளிபெறாது. பகலில் தீபங்கள் ஒளிபெறா. ‘குதோயமக்நி:’ என்று வேதம் ஸூர்யசந்த்ரநக்ஷத்ராதிகள் ப்ரகாசமற்றதாய் இருக்கும்பொழுது இந்த அக்னிக்கு ப்ரகாசம் பெற இடமெங்கே என்று கேட்டது. ஜலத்தினால் அணைந்துவிடும் அக்நி ப்ரம்மதேஜஸ்ஸுக்கு முன் ப்ரகாசிக்க இடமெங்கே? என்று கருத்து. ப்ரளயகாலத்தில் உம் கோபம் போல மண்டி எரியும் ப்ரளயகாலாக்னிபோல ஜ்வாலைகளோடு அக்னி கிளம்பினாலும் அவருக்கு ப்ரகாசமுமில்லை

உஷ்ணமுமில்லை. மின்மினிப் பூச்சியைத் தொட்டால் அதற்குச்சூடு கிடையாது.

𑌅𑌮𑍋𑌘𑌤𑍍𑌵𑌯𑌶𑍋𑌭𑌙𑍍𑌗𑌭𑌯𑌾𑌦𑌿𑌵 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।
𑌅𑌖𑌣𑍍𑌡𑌿𑌤𑌫𑌲𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑌣𑍍𑌡𑍋 𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌃 ॥ ௨௫ ॥

அமோகத்வ யசோபங்கபயாதிவ நிவர்த்ததே !
அகண்டிதபலே தஸ்மிந் தண்டோ தண்டதரார்ப்பித: ‼

(ப-ரை) அகண்டிதபலே- தடுக்கக்கூடாத பலத்தையுடைய, தஸ்மின்- அவன்மேல் தண்டதரார்ப்பித:- யமனால் எரியப்பட்ட, தண்ட-:காலதண்டம், அமோகத்வயசோபங்கபயாதிவ- லக்ஷ்யத்தின்பேரில் விழுந்தால் ஒருக்காலும் வீண்போவதில்லை என்கிற கீர்த்திக்கு பங்கம் வந்துவிடுமோ என்கிற பயத்தினாலே போல. நிவர்த்ததே- திரும்பிவிடுகிறது.

(தா,ம்) ‘𑌯𑌮𑍋𑌽𑌪𑌿 𑌵𑌿𑌲𑌿𑌖𑌨𑍍 𑌭𑍂𑌮𑌿𑌂 𑌦𑌣𑍍𑌡𑍇𑌨𑌾𑌸𑍍𑌤𑌮𑌿𑌤𑌤𑍍𑌵𑌿𑌷𑌾 । 𑌕𑌰𑍁𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌮𑍋𑌘𑍇𑌽𑌪𑌿 𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌣𑌾𑌲𑌾𑌤𑌲𑌾𑌘𑌵𑌮𑍍 ॥’ என்று குமாரஸம்பவம். (யமனுடைய காலதண்டம் எப்பொழுதும் அமோகம் தான், அப்படிக்கிருந்தும் அணைந்த கொள்ளிக்கட்டையைப்போல லகுவாக இப்பொழுது ஒளி மழுங்கியிருக்கும் தன் காலதண்டத்தினால் பூமியைக் கீறிக்கொண்டு நிற்கிறானே இதென்ன விபத்காலம்) என்று ப்ரம்மா கேட்டார். ‘யமனுடைய காலதண்டம் சத்ருபேரில் விழுந்தால் அவனுயிர் தப்பாது. என்று அதன் கீர்த்தி ராவணன் பேரில் யமதண்டத்தைப் பிரயோகிக்கும் முன் ப்ரம்மா குறுக்கிட்டார். இன்னரகன் பேரில் யமன் தன் தண்டத்தை எரிந்தாலும் அது தன் கீர்த்திலைக்காப்பாற்ற அவனிடம் செல்லாமல் திரும்பிவிடுகிறது. மேலே தாக்கியும் பயன்படாமல் போனால் தானே வீணாற்றதென்றும் கீர்த்தியழியக் கூடும் என்று எண்ணம். எதுக்கு விஷப்பரீக்ஷை என்றெண்ணம். யமனுக்கும் யமனை தண்டதாராகிய உம்மால் தான் இவன் மடியவேணுமென்று கருத்து.

𑌨𑌯𑌨𑌾𑌰𑍍𑌚𑌿𑌷𑍍𑌮𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑍈𑌰𑍃𑌤𑍇𑌶𑍍𑌵𑌰𑌵𑌾𑌹𑌿𑌨𑍀 ।
𑌅𑌪𑌸𑍃𑌤𑍍𑌯 𑌪𑍁𑌰𑍋𑌭𑌾𑌗𑌾𑌤𑍍𑌤𑌦𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ ௩௪

நயநார்ச்சிஷ்மதஸ்தஸ்ய நைருதேச்வரவாஹிநீ ।
அபஸ்ருத்ய புரோபாகா தத்யாபி ந நிவர்த்ததே ॥

ப-ரை) நைருதேச்வர வாஹிநீ. தென்மேற்குதிக்பால ரான ராக்ஷஸேச்வரரின் ஸேனை, தஸ்ய நயநார்ச்சிஷ்மத:-அவனுடைய கோபக்கண் ஜ்வாலையின், புரோபாகாத்- எதிர்ப் பக்கத்திலிருந்து, அபஸ்ருத்ய- விலகியோடிக்கொண்டு, அத்யாபி- இன்னமும், ந நிவர்த்ததே- திரும்புகிறதில்லை.

(தா-ம்) தெற்குத்திக்கின்பதி யமனுடைய வ்ருத்தாந்தம் முன் பேசப்பட்டது. இங்கு தென்மேற்கு திக்கின் வ்ருத்தாந்தம். சேனைக்கு 'வாஹிநீ' என்று பெயர். வாஹிநீ என்று ஓடும் நதிக்கும்பெயர். ஓடிவரும் நதிக்கு எதிரே ஒரு தடங்கலிருந்தால் அது பக்கத்தில் பிச்சுக்கொண்டு ஓடும். இவருடைய வாஹிநீ நதியைப்போல் ஓடுகிறது. இவர் ஸேனைக்கு வாஹிநீ என்று பெயர் தகுமென்று ரஸம் நிரகனுடைய கண் கொள்ளிக்கண். ஈச்வரனுடைய மூன்றுவது கண்போல அக்நிக்கண். அவனீச்வர பக்தன், அவன் கண்ணுக்கு எதிரே நிற்பதற்கே பயந்து பக்கத்தில் ஓட்டம் பிடிக்கிறது. அவனூருக்குப்போய் சண்டை ஓய்ந்த பிறகும் இந்த ஸேனை திரும்பி வருவதில்லை. பக்கத்தில் ஒரு காலாக ஓடிப்போன நதி ஜலம் திரும்பி வருமோ. ஓடினது ஓடினதுதான் என்று ரஸம்.

𑌤𑌂 𑌸𑍁𑌪𑍍𑌤𑌮𑌪𑌿 𑌵𑌾 𑌮𑌤𑍍𑌤𑌂 𑌵𑌾𑌰𑍁𑌣𑍋 𑌵𑍈𑌰𑌿𑌦𑌾𑌰𑍁𑌣𑌃 ।
𑌨 𑌰𑍋𑌦𑍍𑌧𑍁𑌂 𑌕𑍍𑌷𑌮𑌤𑍇 𑌪𑌾𑌶𑍋 𑌨𑌲𑌸𑍍𑌤𑌮𑍍𑌭 𑌇𑌵 𑌦𑍍𑌵𑌿𑌪𑌮𑍍 ॥

தம் ஸுப்தமபி வா மத்தம் வாருணோ வைரிதாருண: ।
ந ரோத்தும் க்ஷமதே பாசோ நலஸ்தம்ப இவ த்விபம் ॥

(ப-ரை) வைரிதாருண:- சத்ருக்களுக்கு அச்சம் தரும், வாருண:பாச: - வருணன் பாசம், ஸுப்தமபி வா மத்தம், தம்- தூங்கும் ஸமயமாயிருந்தாலும், குடித்துப்ரக்ஞையற்ற

மயக்க ஸமயமாய் இருந்தாலுமவனை, த்விபம் ரோத்தும்- ஆனையைக் கட்டிப்போட, நலஸ்தம்ப இவ - ஓர் புல்லைப் போல, ரோத்தும் ந க்ஷமதே- கட்ட வலுமையற்றதாய் இருக்கிறது.

(தா-ம்) மேற்குத்திக்கு வருணனுடையது. அதற்கு வாருணீ திக்கு என்று பெயர். மயக்கத்தைத் தரும் மத்யத்துக்கும் (வாருணீ) என்று பெயர். நரகன் எதிர்த்து வரும் போது அவன் கண்முன் நிற்கவேண்டாம். அவன் தூங்கிக் கொண்டிருக்கும் ஸமயத்தில் அவன் கொள்ளிக்கண்ணுக்குப் பயப்பட வேண்டியதில்லையே. வாருணீ என்னும் மத்யத்தில் அவனுக்கு மிக்க ப்ரீதியுண்டே. தூங்கிக்கொண்டிருக்கையிலாவது, மத்யபானத்தால் ப்ரக்ஞையற்றுக் கிடக்கையிலாவது வருணனுடைய பாசத்தைக்கொண்டு அவனைக்கட்டிப்போடக்கூடாதா? என்று கேட்பீரோ? அதையும் செய்து பார்த்தோம். ஆனையை ஒரு புல்லைக்கொண்டு கட்டுவது ஸாத்யமோ? அப்படியேதான் வருணபாசத்தைக்கொண்டு அவன் தூங்கும்போதும், குடிமயக்கத்திலிருக்கும்போதும் கூட கட்டுவது அஸாத்யமாயிருக்கிறது, அவனை எதிர்த்து பாசத்தால் கட்டுவதற்குப் ப்ரஸக்தி ஏது

ശക്തഃ ശമയിതും തസ്യ സംവൎത്താൎഹജവോഽപി സൻ ।
നഭസ്വാൻ കേലതഃ സംഖ്യേ ന സ്വേദകണികാമപി ॥ ൩൮ ॥

சக்த: சமயிதும் தஸ்ய ஸம்வர்த்தார்ஹஜவோபி ஸன் ।
நபஸ்வான் கேலத: ஸங்க்யே ந ஸ்வேதகணிகாமபி ॥ 38 ॥

(ப-ரை) நபஸ்வான்-வாயுதேவர், ஸம்வர்த்தார்ஹஜவோபிஸன் - ப்ரளயகாலத்திற்குத் தக்க வேகத்தோடு கூடியும், ஸங்க்யே - யுத்தத்தில், கேலத: - விளையாடும், தஸ்ய- அவனுடைய, ஸ்வேதகணிகாமபி - வேர்வைத்துளியைக்கூட, சமயிதும்- உலற்ற, ந சக்த:- அசக்தராயிருக்கிறார்.

(தா-ம்)நரகாசுரன் ப்ரளயகால விளையாட்டைக்கொள்ளுகிறான் என்றீர்களே, வாயுமுதலியவர்கள் ப்ரளயகாலத்தில்

கொள்ளும் ப்ரசண்டவேகத்தை இப்பொழுது கொள்ளக் கூடாதோ ? ஸம்வர்த்தமென்பது ப்ரளயம். ப்ரளயகாலோசிதமான வேகத்தைக்கொண்டு அவன்பேரிலடித்து அவனைத்தள்ளி விழுத்தக்கூடாதோ என்கிற சங்கைக்கு பதில் கூறுகிறார். வாயு ப்ரளயவேகத்தைக்கொள்ளுகிறார். ஆனாலுமவன் ஸமீபம் சென்று அவனைத்தொடக்கூட பயப்படுகிறார் யுத்தலீலையில் அவன் வேர்வையை நீக்க வாயு ப்ரளயவேகத்தோடு அடித்தாலுமவனுக்கது ப்ரியமாகவேயிருக்கும்; அப்பொழுதவனிடமந்த வேகத்தோடு வாயு வந்து மேலே அடித்தால் கோபிக்கமாட்டான். அப்படிக்கிருந்துமவர் அணுக பயப்படுகிறார். ஓரொரு சமயத்தில் ப்ரளயமாருதமாய் அவன்பேரிலடித்தபோதவனுடம்பு வேர்வையில் ஒரு சிறு திவலையைக்கூட அவன் உலர்த்தமுடியவில்லை. கணமென்பது திவலை. கணிகையென்பதல்பமான திவலை. (ந சோஷயதிமாருத:) என்றபடி வாயுவுக்கு உலரச்செய்வது பலம். அவன்வேர்வையினல்பத்திவலையை யசைக்கமுடியாத இவர் வேகமவனை எப்படித்தள்ளி வீழ்த்துமென்று கருத்து.

𑌧𑌨𑌦𑍇𑌨 𑌗𑌦𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌹𑌤𑍀 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌪𑌾𑌤𑌿𑌤𑌾 ।
𑌅𑌭𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍌𑌷𑍍𑌪𑌮𑌾𑌪𑍀𑌡𑌮𑌨𑌾𑌪𑍀𑌡𑌤𑍍𑌵𑌮𑌾𑌦𑌦𑍇 ॥ ௩௯ ॥

தனதேன கதா தஸ்ய மஹதீ மூர்த்நி பாதிதா ।
அபித்வா பௌஷ்பமாபீடமநாபீடத்வமாததே ॥ 39 ॥

(ப-ரை) தனதேந- குபேரனால், தஸ்ய மூர்த்நி- அந்த அஸுரனுடைய தலையில், பாதிதா- எறியப்பட்ட, மஹதீ கதா- பெரிய கதாயுதம், பௌஷ்பம்- புஷ்பமயமான, ஆபீடமபி- தலை மாலையைக்கூட, அபித்வா- பேதிக்க முடியாமல், அநாபீடத்வம் - சிறிது கூட பீடையில்லாமையை, ஆததே- செய்தது.

(தா-ம்) குபேரன் தன் பெரும் கதையை அவன் தலையில் எறிந்து அவன் தலையை பேதிக்கலாகாதோ என்றுகேட்

பீரோ? அவன் எறிந்ததில் குறைவு இல்லை. அஸுரன் தலை யிலிருந்த புஷ்பமாலையைக்கூட அந்தப்பெரும் கதை அறுக்க முடியவில்லை. அவன் தலையை அறுப்பதெப்படி ஸாத்யம்? தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்பர். இங்கே தலைமாலைகூட சூட்டினதப்படியே நலுங்காமலிருக் கிறது. ஆபீடமென்பது தலைமாலைக்குப் பெயர். தலையில் ஆபீடமிருக்கையிலேயே தலைக்குப் பீடையேயிருக்கவில்லை யென்று விரோதாபாஸ அலங்காரம்.

𑌜𑌟𑌿𑌲𑌾𑌨𑍍 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌸𑌨𑌾𑌨𑍍 𑌨𑌿𑌯𑌮𑌂 𑌤𑍀𑌵𑍍𑌰𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍 ।
𑌤𑌪𑌸𑍍𑌵𑌿𑌨 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌸 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌾𑌤𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ॥ 𑌸𑌮

ஜடிலான் க்ருத்திவஸநான் நியமம் தீவ்ரமாஸ்திதான் ।
தபஸ்விந இதி க்ஞாத்வா ஸ ருத்ராந்நாதிவர்த்ததே ॥ ॥ 40 ॥

(பதை) ஸ:- அந்த நரகன், ஜடிலான்- ஜடைகளைத் தரித்துக்கொண்டும், க்ருத்திவஸநான்- (யானை) த்தோலைப் போர்த்திக்கொண்டும், தீவ்ரம் நியமம்-கொடிய வ்ரத நியமத்தை, ஆஸ்திதான்-அனுஷ்டிக்கும், ருத்ரான்-ஏகாதச (பதினோரு ருத்ரர்களை, தபஸ்விந: இதி க்ஞாத்வா-தபஸ்விக ளென்று நினைத்து, நாதிவர்த்ததே-அதிக்ரமிப்பதில்லை.

(தா-ம்) நீங்களெல்லாம் ஓரொருவர். ஏகாதச ருத்ரர் களிருக்கிறார்களே அவர்களில் சங்கரரும் ஒருவர். 'ருத்ரா ணாம் சங்கரச் சாஸ்மி' அவர்களுக்கு ஹுங்காரம் சஸ்த்ரம். அவர்களிந்த அஸுரனை அடக்கக்கூடாதோ? என்கிற சங் கைக்கு பதில் கூறுகிறார். அவர்களுடைய தபஸ்வி வேஷம் அவர்களைக்காப்பாற்றுகிறது. சிரஸ்ஸில் ஜடை; உடலில் போர்த்தியிருப்பது ஆனைத்தோல். தீவ்ரமான ஊர்த்வ ரேதோவ்ரதம் அந்த வ்ரதத்தில் மௌனநியமத்தை வஹித் துக்கொண்டு முனிவேஷதாராயிருக்கிறார்கள். அஸுரன் வரும்பொழுது பூர்ணமான தபோவேஷத்தையும் மௌன வ்ரதத்தையும் கைக்கொள்ளுகிறார்கள். ஹுங்காரத்தையே

செய்கிறதில்லை. ஹுங்காரமாகிய சஸ்த்ரத்தை அவர்கள் ப்ரயோகியாமல் மௌனமாயிருப்பதால்'இவர்கள் சண்டைக் காரரல்ல' கேவலம் தபஸ்விமுனிகள்' என்று அவர்களிடம் போகிறதில்லை. இம்முனிகளிடம்போய் அவர்களைத் திர்த்துத் தூண்டினுல் சாபம் கொடுப்பரோ என்று பயம. சஸ்த்ரபய மில்லாவிடினும் முனிசாபபயமுண்டு. தபஸ்விகள் என்றால் இரக்கத்திற்கு விஷயமான பேதைகளென்று பொருள். ஐயோ பாவம் இத்தபஸ்விப் பேதைகளை ஏன் ஹிம்ஸிக்க வேணுமென்று எண்ணுகிறுன் போலும்.

[illegible] ।
[illegible] ॥ சக ॥

அஹரத்வாருணம் சத்ரம் மாமகம் மணிபூதரம் ।
அம்ருதஸ்யந்திநீசாஸ்மஜ்ஜநந்யா. மணிகுண்டலே ॥ **41** ॥

(பதை) வாருணம் சத்ரம்- வருணனுடையதான கொடையையும், மாமகம்- என்னுடைய, மணிபூதரம்- ரத்நமயமாய் மந்தர ச்ருங்கமாகிற விளையாடும் மலையையும், அம்ருதஸ்யந்திநீ- அம்ருதத்தைப்பெருக்கும், அஸ்மஜ்ஜநந்யா மணிகுண்டலே ச-நம் தாயாருடைய ரத்நகுண்டலஜோடியையும், அஹரத்- அபஹரித்துவிட்டான்.

(தா-ம்) ருத்ரர்களைப்போல் நானும் ஜடைபோட்டுக் கொண்டு தபஸ்வி வேஷம் பூண்டு எப்படித் தப்பிப்பிழைக்கக்கூடும். சத்ரம் சாமரம் முதலிய ராஜசின்னங்களை தேவராஜனுகிய நான் எப்படி விட்டுவிடுவது? வருணன் குடை நிழலில் நானிருப்பது. என் தலைமேல் குடை. குடையைப் பிடுங்கினுன். என் விளையாட்டுபர்வதத்தையும் அபஹரித்தான். அதிதி நம்மிருவருக்கும் தாயார். அவள் காதுகுண்டல ஜோடியையுமபஹரித்துக்கொண்டு போய் தன் தாயாருக்குப் போட்டிருக்கிறுன். [illegible] ॥ என்கிற பாகவத ச்லோகமிங்கே ஸ்வாமி நெஞ்சில் ஓடுகிறது.